**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 64** **நாள்: 05.04.2026**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு வகைகளில் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தின் வெளிப்பகுதியில் நாட்டுப்புறக் கலைஞர்களின் தப்பாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளின் வாயிலாக தேர்தல் விழிப்புணர்வுப் பதாகைகளுடன் துண்டுப்பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பின்னர், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புஷ்பா நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதி வாக்காளர்களுக்கு புலியாட்டம் மற்றும் டோல் கலைக்குழுவினர் மூலம் தேர்தல் விழிப்புணர்வுப் பதாகைகளுடன் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு தேர்தல் நாள் மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோயம்பேடு பேருந்து நிலையத்தில் நாட்டுப்புற கலைஞர்களின் மல்லர் கம்பம், பறை இசை, பொய்க்கால் குதிரை, ஒயிலாட்டம் ஆகிய கலைநிகழ்ச்சிகளின் வாயிலாக தேர்தல் விழிப்புணர்வுப் பதாகைகள் ஏந்தியவாறு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பின்னர், தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிவன் பூங்காவில் நாட்டுப்புற கலைஞர்கள் வாயிலாக நாட்டுப்புற நடனம், பறை இசை, சிலம்பம், கரோக்கி மூலம் வாக்காளர்களுக்கு 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மெஹந்தி கலைஞர்கள் தேர்தல்

விழிப்புணர்வு மெஹந்தியினை வாக்காளர்களின் கைகளில் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தொடர்ந்து, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெசன்ட் நகர் கடற்கரையில் நாட்டுப்புற கலைஞர்கள் வாயிலாக நாட்டுப்புற நடனம், இசைக்குழு மூலம் பாடல்கள், கானாப் பாடல்கள், டிஜே பாடல்கள், திடீர் நடனக் குழு (Flashmob) மூலம் வாக்காளர்களுக்கு 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

**“தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா”**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**